| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / **My No** DSD/HO/04/ER/சமுர்த்தி வீட்டுத்தோட்டம் | ඔබේ අංකය / உமது இல / **Your No** .............................................. | දිනය / திகதி / **Date** 2020.06.04 |

மாவட்டச் செயலாளர்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்,
பிரதேச செயலாளர்,
மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர்,
சமுர்த்தி முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

**<u>வீட்டுத்தோட்ட தேசிய பயிர்ச்செய்கை வேலைத்திட்டம் -2020 பெரும் போகம்.</u>**

பொருளாதார புனரமைப்பு, மற்றும் வறுமையினை ஒழிக்கும் பொருட்டான விசேட ஜனாதிபதி செயலணியின் ஊடாக 2020 பெரும் போகத்தில் வீட்டுத்தோட்ட தேசிய பயிர்ச்செய்கைச் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவது தொடர்பான கலந்துறையாடல் ஒன்று 2020.06.01ம் திகதி நடாத்தப்பட்டது.

02. அங்கு கலந்துறையாடல்களுக்குட்பட்ட விடயங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை தங்களுக்கு முன்வைப்பதுடன் அதன் பிரகாரம் இந்த வேலைத்திட்டத்தினை தங்களது மாவட்டத்தில் வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தங்களது பிரத்தியேக கவனத்தினை செலுத்தமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

03. பொருளாதார புனரமைப்பு மற்றும் வறுமையினை ஒழிக்கும் பொருட்டான விசேட செயலணியின் பணி ஒப்படைப்புகள் வர்த்தமானியின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் முக்கிய குறிக்கோள்களாக குறிப்பிடப்பட்டுள்ளதனால் இந்த வேலைத்திட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் பணிகளை நிறைவேற்றுவது அத்தியவசியமானதாக அமையும்.

I. உள்நாட்டு உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கு வீட்டுத்தோட்ட உரிமையாளர்களை ஊக்குவித்தல் மற்றும் அதன் பொருட்டு அவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல்.

II. உள்நாட்டு உணவு பாதுகாப்பின் பொருட்டு நெல், தானிய வகைகள், மரக்கறி, பழங்கள், மீன், இறைச்சி, பால் மற்றும் முட்டை உற்பத்திபண்ணை நடவடிக்கைகளின் பொருட்டு விவசாயிகளுக்கு வசதிகளை வழங்குதல்.

III. அரசாங்க மற்றும் தனியார் விதை மற்றும் மரக்கன்றுகள் நாற்று மேடையாளர்களை ஊக்குவிப்பதும் விவசாய நடவடிக்கைகளின் பொருட்டுத் தேவையான விதைகள், மரக்கன்றுகள், பசளை, உபகரணங்களை வழங்குவதற்கு குறித்த நிறுவனங்களை நெறிப்படுத்துவதுடன், தேவையான வசதிகளும் வழங்குதல்.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

IV. Covid-19 தொற்றுநிலை காரணமாக சர்வதேச மற்றும் தேசிய ரீதியாக ஏற்பட்ட உணவுப்பாதுகாப்பு நிலையின் முக்கியத்துவம் காரணமாக மக்கள் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் இணைந்துள்ளதனால் இந்த பங்கேற்பினை தொடர்ச்சியாக பேணிக்கொள்ளும் பொருட்டு அரசாங்கத்தின் ஒத்துழைப்பினை வழங்குதல்.

V. முன்வரும் பெரும் போகத்தில் இந்த வேலைத்திட்டத்தினை நிலைபேரானதாக திட்டமிட்ட வீட்டுத்தோட்டத்தினூடாக குடும்பத்தின் நாளாந்த போசனை தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்ளுதல்.

04. இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கி கொள்வதற்காக மேற்கொள்ளவேண்டிய பணிகள், அப்பணிகளை நிறைவேற்றும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வேறு நிறுவனங்கள், மற்றும் நிறைவேற்ற வேண்டிய திகதிகள் தொடர்பில் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இணைப்பு -01) அங்கு தயாரித்த இந்த வேலைத்திட்டத்திற்குறிய செயற்பாடுத்திட்டமிடலையும் இத்துடன் தங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன். (இணைப்பு-02) இந்த செயற்பாடுகளை களத்துறையில் செயற்படுத்தும் போது பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்ளவேண்டும்.

05. அதே போன்று வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையின் பொருட்டு தேவையான மரக்கன்று வகைகளை வழங்குவது பிரதானமாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பொறுப்பு ஒன்றாகும் என்பதுடன் இது தொடர்பில் ஏற்கனவே தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள பிரகாரம் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து ஆகக்குறைந்தது ஒரு நாற்றுமேடையினையாவது ஆரம்பித்தல் வேண்டும். ஏற்கனவே நாற்றுமேடைகளை நடாத்திச்செல்கின்ற பயனாளிகள், அல்லது புதிதாக நாற்றுமேடையினை ஆரம்பிப்பதற்கு தகுதியான பயனாளிகளை இனங்கண்டு அதுபற்றிய தகவல்களை இத்துடன் உள்ள படிவத்திற்கமைய (இணைப்பு-03) jeevonopaya@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாக வழங்குமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

06. பொருத்தமான மற்றும் கேள்விகள் உள்ள மரக்கறி வகைகள், பழவகைகள் உட்பட பொருளாதார பெறுமதியுடைய மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு நாற்றுமேடை உரிமையாளர்களை ஊக்குவிப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதுடன் இங்கு குறுகிய கால மற்றும் நிலையான பயிர்கள் ஆகிய எந்த வகையிலுமான கன்றுகள் தொடர்பில் கவனத்தினை செலுத்துவது பொருத்தமானதாகும். அத்துடன் அக்கன்றுகளை கூடியளவு சாதாரண விலைக்கு பயனாளிகளுக்கு வழங்கக்கூடியதாகவும், நிறைபேறானதாக நாற்றுமேடைகளை பராமரித்துச் செல்லக்கூடியவர்களையும் இதன் பொருட்டு தெரிவு செய்து கொள்ளமாறும் வினயமுடன் அறியத்தருகின்றேன். நாற்றுமேடைகளுக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் தற்போது நடைமுறையிலுள்ள 5% வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் சமுர்த்தி வங்கியின் வாழ்வாதார சுழற்சி நிதியத்தின் மூலம் உயர்ந்தபட்சமானது ரூபா 50,000/= இற்கு உட்பட்டதாக கடன் தொகையாக வழங்கமுடியும். இதை விட பணம் தேவையானவர்களின் பொருட்டு சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படுகின்ற ஆகக்குறைந்த வட்டி வீதங்களின் கீழ் தேவையான கடனை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

07. துரிதமாக இந்த வேலைத்திட்டத்தினை ஆரம்பிக்க வேண்டியுள்ளதனால் நாற்றுமேடைகளை தற்போது நடாத்திச் செல்கின்றவர்கள் தொடர்பான தகவல்களையும், நாற்றுமேடைகள் இல்லாத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பொருத்தமான ஆட்களை இனங்கண்டு அவர்களது தகவல்களை வழங்குவதற்கும் நாற்றுமேடையினால் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைகளின் பொருட்டு தேவையான நாற்றுவகைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மேலும் அறியத்தருகின்றேன்.

08. இது தொடர்பான மேலதிக தகவல்களை பொருளாதார வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி பிரிவிலிருந்து (தொலைபேசி இலக்கம் -0112873801) பெற்றுக்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

ஆர்.பீ.பி. திலக்கசிரி
பணிப்பாளர் தலைமையதிபதி

Translated By:- M.M.M. Jawhar (Translator)

பிரதிகள்:-

1. ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலகம், கொழும்பு - த.கூ.க.பொருட்டு
2. செயலாளர்-
   மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு. - த.கூ.க.பொருட்டு
3. குழுத் தலைவர்- கிராமிய பொருளாதாரம், பொருளாதார புனரமைப்பு, மற்றும்
   வறுமையினை ஒழிப்பது தொடர்பான விசேட ஜனாதிபதி செயலணி - த.கூ.க.பொருட்டு
4. இராஜாங்க செயலாளர், சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
5. கணக்காய்வாளர் தலைமையதிபதி,
   கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
6. பிரதம கணக்காளர்,சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
7. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்,
   சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
8. சகல பிரிவுத்தலைவர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு